வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். STC 576/2021

வழக்கு சாட்சி RW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெகன் | ஜாதி | |
| கணவர்/தந்தை | கைலாசம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 45 |

தேதி 15.04.2025

புகார்தாரர் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்று நான் பணத்தினை கொடுக்கவில்லை என தாக்கல் செய்துள்ளார்கள். புகார்தாரரை எவ்வாறு தெரியும் என்றால் எனது தந்தை மூலமாக தெரியும். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் கட்டிட தொழில்நுட்பம். புகார்தாரரிடம் நான் பணம் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். எவ்வளவு பணம் பெற்றேன் என்றால் 2017 ஆம் ஆண்டு ரூ. 5 லட்சம் பெற்று 2021 ஆம் ஆண்டு திருப்பி கொடுத்துவிட்டேன். பணத்தினை எவ்வாறு திருப்பி கொடுத்தேன் என்றால் ரொக்க பணமாகத்தான் கொடுத்தேன். அதற்கான ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ.1ல் புகார்தாரர் பணத்தினை பெற்றுக்கொண்டதாக கையொப்பம் செய்துள்ளாரா என்றால் இல்லை. அவர்ததான் என்னிடம் பத்திரத்தை பணத்தினை பெற்றபிறகு திருப்பி கொடுத்தார். எ.சா.ஆ.1 ஆவணம் புகார்தாரர் கொடுத்த ஆவணம் அல்ல என்றாலும், நீதிமன்றத்தில் இவ்வழக்கிற்கான உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எ.சா.ஆ.2ல் CSRக்கு என்ன புகார் அளித்தேன் என்றால் வட்டி கொடுக்காததால் காசோலையை வைத்திருப்பதாக எனது தந்தையாரிடம் போனில் மிரட்டியதால் அளித்த புகார் ஆகும். புகார் நான் மேற்சொன்ன காரணங்களுக்காக அளிக்கவில்லை என்றாலும், புகார்தாரருக்கு அளிக்க வேண்டிய தொகையினை ஏமாற்றவேண்டி பொய்யாக அளித்த புகார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ.2 ஆவணத்தில் நான் கூறியுள்ள சங்கதிகள் உள்ளது என்றால் சரியல்ல. எந்த காசோலை தொடர்பாக புகார் அளித்தேன் என்ற விபரம் எனது புகாரில் இல்லை என்றால் சரியல்ல. காசோலையை வங்கியில் செலுத்திய விபரம் எனக்கு

தெரியும் என்றால் புகார்தாரர் செலுத்திய பின்புதான் அவர் கூற எனக்கு தெரியும். காசோலையை வசூலிப்பு தாக்கல் செய்யும்போது தகவலானது கைப்பேசிக்கு வரும் என்றால் ஆமாம். ஆனால் இவ்வழக்கு காசோலைக்கு வரவில்லை. காசோலையை தாக்கல் செய்தபின்பு புகார்தாரரிடம் தொகையினை தீர்பபதற்கு நான் ஒப்புக்கொண்டேன் என்றால் இல்லை. ரூ. 5 லட்சத்தை பெற்றுக்கொண்டதற்காக நான் அளித்த காசோலைதான் இவ்வழக்கு காசோலை என்றாலும், மேற்படி தொகையினை நான் திருப்பி கொடுக்காததால்தான் இவ்வழக்கினை புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் அளித்த புகாரில் போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் செய்தார்கள். புகாரில் என்ன முடிவு செய்யப்பட்டது என்றால் புகார்தாரர் நீதிமன்றத்தில் தீர்த்துகொள்வதாக கூறினார். புகார் முடிக்கப்பட்டதற்கு அறிவிப்பானது கொடுக்கப்படும் என்றால் எனக்கு தெரியாது. நான் பணம் அளிக்கவேண்டும் என்பதால்தான் காவல் நிலையத்தில் புகாரானது முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனால்தான் நான் முடிக்கப்பட்ட அறிவிப்பினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரருக்கு தரவேண்டிய ரூ.5 லட்சம் பணத்திற்காக இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், எனவே நான் மேற்படி காசோலை தொகையினை கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கானது அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**